# கீழக்கரை நகர்மன்ற 06.01.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2018–2019 ஆம் ஆண்டு திட்டம் செயல்படுத்தும் பொருட்டு 13.08.2018–ந் தேதி நடைபெற்ற 7–வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.418, நாள்.21.08.2018 ஆகியவற்றின்படி, இந்நகராட்சிக்கு ரூ.158.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 22866/2018/பி3, நாள்.23.08.2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது (GOI- 35%, State Share- 55%, ULB Share- 10%). மேற்காணும் திட்டப் பணிகளுக்குரிய ஒதுக்கீட்டில், இந்நகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Compost Centre) அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.120 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் செயல்முறை ஆணை ந.க.எண்.18281/2017/டிஒ2, நாள் 05.10.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | 60.00 |
| 2. | வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | 60.00 |

இந்நகராட்சிக்குட்பட்ட மேற்காணும் இரண்டு இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 13.11.2018–ந் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.492, நாள். 28.12.2018–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.எம். முனியசாமி என்பவருக்கு 09.01.2019–ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்காணும் இரண்டு பணிகளில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைப்பதற்குரிய துவக்கக்கட்ட பணிகள் நடைபெறும் போது, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் ஒரு சில அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இத்திட்டப் பணியினை மயானம் பகுதியில் நடைபெற விடாமல் தடுத்து வருகிறார்கள். மேலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WRIT APPEAL (MD) 72/2009 & M.P. (MD) 1/2009–ன்படி 02.11.2009–ந் தேதி தடை உத்திரவு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து, மீறி பணிகள் நடைபெற்றால் சாலை மறியலில் ஈடுபடப் போவதாகவும் எச்சரித்து வருகிறார்கள். அப்பகுதி மக்களிடம் இத்திட்டத்தின் பயன்பாடு மற்றும் நன்மைகளை விரிவாக எடுத்து கூறியும், போதிய ஒத்துழைப்பு இல்லாமல் பணியினை மேற்கொள்ள இயலாத வண்ணம் உள்ளது.

அதனை தொடர்ந்து நுண் உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணி அரசின் திட்டமாக இருப்பதாலும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பணியினை கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாலும், பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழலில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஏதும் இல்லாத நிலையில், இத்திட்டப் பணியினை ஏற்கனவே உள்ள பழைய உரக்கிடங்கு Bio Mining மூலம் குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்ட பகுதியில், தற்போது இத்திட்டத்தினை செயல்படுத்தினால் ஒரே இடத்தில் அனைத்து பணிகளும் உரிய முறையில் செய்வதற்கு ஏதுவாக அமையும் என்றும், வார்டு எண்.2 மற்றும் எண்.3–ல் உள்ள பகுதிகள் தூர

வித்தியாசம் இல்லாமல் அருகாமையில் அமைந்துள்ளதால், வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கிலேயே ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலான நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் Construction of Micro Composted Centre) பணியை தற்போது ஒப்பந்தம் எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மூலமாகவே, பணியினை உடனடியாக செய்து முடிப்பதற்கு **30.12.2019**–ந் தேதி இந்நகராட்சி பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பொறியாளரின் அறிக்கையின்படியும், திட்டப்பணியினை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டும், கீழ்காணும் இடத்தில் பணியினை மேற்கொள்ள மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ லட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | **60.00** |

மேற்காணும் இடத்தில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள ஒப்பந்ததார் திரு.எஸ்.எம். முனியசாமி அவர்கள் மூலம் திட்டப்பணிகள் உடனடியாக செய்து முடிப்பதற்கு திருத்திய நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவினை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு வழிமுறையாக அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 635/2018/இ1)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகராட்சி பொறியாளர் அறிக்கையின்படி, திட்டப்பணியினை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

இப்பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள திரு.எஸ்.எம். முனியசாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் உடனடியாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.678 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :2</u>

கீழக்கரை நகராட்சிக்கு **14**–வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் (14th Central Finance Commission) கீழ் ரூ.**102.49** இலட்சம் முதல் தவணையாகவும், ரூ.**102.49** இலட்சம் இரண்டாவது தவணையாகவும் ஆக மொத்தம் ரூ.**204.98** இலட்சம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், முதல் தவணை நிதி ரூ.**102.49** இலட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பணிகள் தேர்வு செய்து, அதற்குரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்புமாறு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளர் அவர்களின் **02.01.2020** மற்றும் **03.01.2020** ஆகிய தேதிகளில் தொலைபேசி செய்தி (Tele Phone) மற்றும் குறுஞ்செய்தி (Whats app message)-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் செய்தியில் தெரிவித்துள்ளதிற்கிணங்க, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேவர்கல் சாலைப்பணிகள் ரூ.**103.00** இலட்சத்திற்கு **1900** மீட்டர் நீளத்தில் அமைப்பதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் கீழ்கண்டவாறு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **சிப்பம் – I**<br>அன்புநகர் 2–வது குறுக்கு சந்து புதுக்குடி பள்ளிவாசல் ஆகிய இடங்களில் பேவர்கல் சாலை அமைக்கும் பணி | 750 | 40.00 |
| 2 | **சிப்பம் – II**<br>பட்டாணியப்பா தர்ஹா மூன்று குறுக்கு சந்து மற்றும் முத்துச்சாமிபுரம் ஆகிய இடங்களில் பேவர்கல் சாலை அமைக்கும் பணி | 650 | 33.00 |
| 3 | **சிப்பம் – III**<br>வடக்குத் தெரு (மொட்டை தைக்கா) மற்றும் தைக்கா ஆகிய இடங்களில் பேவர்கல் சாலை அமைக்கும் பணி | 500 | 30.00 |
| | **மொத்தம்** | **1900** | **103.00** |

மேற்காணும் விபரப்படி **ரூ.103.00** லட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி கோரும் பொருட்டு, மதுரை, நகராட்சிநிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 03/2020/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளை மன்றம் அனுமதிக்கலாம்
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.679 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :3

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 684/2018/சி1, நாள்.07.09.2019–ன்படி, கீழக்கரை நகராட்சி மேலாளர் திருமதி. ஆ. தனலெட்சுமி அவர்களை, கீழக்கரை நகராட்சி ஆணையாளர் பணியிடத்தில் முழு கூடுதல் பொறுப்பாக (Full Additional Charge) பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது. அதன்படி அன்னார் கீழக்கரை நகராட்சி ஆணையாளர் பணியிடத்தில் 07.09.2019 பிற்பகல் முதல் பொறுப்பேற்று பணிபுரிந்து வருகிறார். தற்போது அன்னார் ஆணையாளர் பணியிடத்தில் முழு கூடுதல் பொறுப்பாக பணியேற்றுக் கொண்ட நாளான 08.09.2018 முதல் 31.12.2019 வரையிலான மாதங்களுக்கு கூடுதல் பொறுப்பு படி கணக்கிட்டு வழங்குமாறு 27.12.2019–ம் தேதிய தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி மேலாளர் திருமதி. ஆ. தனலெட்சுமி அவர்களின் கோரிக்கையின்படி, அரசாணை நிலை எண்.153, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்.05.12.2017–ல் தெரிவித்துள்ளதிற்கிணங்க, ஆணையாளர் பணியிடத்தில் முழு கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்த காலத்திற்கு கூடுதல் பொறுப்பு படி ஒரிஜினல் பணியிடத்தில் வாங்கிய சம்பளத்தில் 1/5 பாகம் கூடுதல் பொறுப்பு படி கீழ்கண்டவாறு வழங்குவதற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) 08.09.2018 முதல் 30.09.2018 வரை 23 நாட்கள் | – ரூ. 7,084/– |
| 2) 01.10.2018 முதல் 30.09.2019 வரை 12 மாதம் x ரூ.9520/– | – ரூ. 1,14,240/– |
| 3) 01.10.2019 முதல் 31.12.2019 வரை 3 மாதம் x ரூ.9800/– | – ரூ. 29,400/– |
| **மொத்தம்** | **ரூ. 1,50,724/–** |

இங்கராட்சி மேலாளர் திருமதி. ஆ. தனலெட்சுமி அவர்களுக்கு மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள கூடுதல் பொறுப்பு படி ரூ. 1,50,724/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.971/2018/சி1)**

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

இந்கராட்சி மேலாளர் திருமதி. ஆ. தனலெட்சுமி அவர்களுக்கு 08.09.2018 முதல் 31.12.2019 வரையிலான மாதங்களுக்கு கூடுதல் பொறுப்பு படி ரூ. 1,50,724/– மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண்.680 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :4</u>

அரசு ஆணை எண்.(MS) 111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் [ME3(2)] வழங்கல் துறை, நாள்.13.08.2007ல் தெரிவித்துள்ளவாறு, கீழக்கரை நகராட்சியில் புள்ளி விவரக்குறிப்பாளராக பணிபுரிந்து, வயது முதிர்வு காரணமாக 31.03.2018–ல் ஓய்வு பெற்ற, திரு.எஸ். பரந்தாமன் அவர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா 148 தவணைகள் மற்றும் அதற்கான அனுமதிக்கப்பட்ட வட்டி தொகைகள் ரூ.8,087/– மற்றும் நகராட்சிப் பங்குத் தொகை ரூ.10,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கும் அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.96/2018/சி1)**

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

இந்நகராட்சியில் புள்ளிவிவரக்குறிப்பாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.03.2018–ந் தேதி ஓய்வு பெற்றுள்ள, திரு.எஸ். பரந்தாமன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா, வட்டி மற்றும் நகராட்சி பங்குத் தொகைகள் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண்.681 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :5</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி, தொழில்வரி உரிமக்கட்டணம் ஆகிய வரி மற்றும் வரியில்லா இனங்களை ஆட்டோ மூலம் மைக்செட் விளம்பரம் செய்யும் பணி மற்றும் விளம்பர பலகை (Flex board) அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.1,80,000/–க்கு இந்நகர்மன்றத்தில் 30.12.2019–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணிகள் செய்து கொடுப்பதற்கு விலை குறிப்பிட்டு 02.01.2020–ந் தேதி வரப்பெற்றுள்ள கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
**(கோப்பு எண்.743/2016/அ1)**

| வ. எ ண் | விபரம் | அளவு | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | காஞ்சனா ஒலி ஒளி அமைப்பகம், அன்புநகர், கீழக்கரை. ரூ | நண்பன் ரேடியோஸ், தெற்கு தெரு, கீழக்கரை. ரூ | ஆமினத்து ரேடியோஸ் & லைட்ஸ், 4/17–8, கிழக்குத் தெரு, கீழக்கரை. |
| 1 | ஆட்டோ விளம்பரம் | நாள் ஒன்றிற்கு | 2400 | 2500 | 2600 |
| 2 | பிளக்ஸ்போர்டு | அளவு ஒன்றிற்கு 10X6 | 600 | 650 | 700 |

<u>அலுவலக குறிப்பு :</u>

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள காஞ்சனா ஒலி ஒளி அமைப்பகம், கீழக்கரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.682 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**